வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 16.02.2026 திங்கட்கிழமை | இதழ் : 47 | பக்கங்கள் : 08

## வாசகர் கவனத்துக்கு...!

யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' தொடக்கி வைத்த பத்திரிகை பாரம்பரியத்தை கட்டிக்காக்க தொடர்ந்து போராட வேண்டி இருக்கிறது. அதனைத் தொடர பொருத்தமான மனித வளத்தை - பத்திரிகையாளர் வளத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதனால் ஒரு வாரத்துக்கு பத்திரிகை வெளியிடுவதை நிறுத்தி வைக்க வேண்டியுள்ளதால் அடுத்த இதழ் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 22ஆம் திகதியே வெளிவரும் என்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.



சிவராத்திரி தினமான நேற்று வரலாற்று பிரசித்தி பெற்றதும் பாடல் பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் நடந்த விசேட பூசையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்து கொண்டார்.

# திம்பு கோட்பாடுகளின்படி அரசமைப்புக்கு யோசனை

### நல்லூரில் கூடி ஒருமனதாக தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 16

தமிழ் மக்களின் அபிலாசையான திம்பு கோட்பாடுகளை முழுமையாக அனுபவிக்கும் விதத்திலான சுயாட்சி அம்சங்களுடன் கூடிய அரசமைப்புக்கான யோசனைகளை தயாரிப்பது - என்று நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நேற்றுக்கூடி ஒருமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஏக்கிய ராஜ்ய அரசமைப்பை நிராகரிப்பது தொடர்பிலும் தமிழ்த் தேசம் - இறைமை - சுயநிர்ணயத்தை அங்கீகரிக்கும் தீர்வை கோருவது தொடர்பிலும் தமிழ்த் தேசிய பேரவையின் அழைப்பின் பேரில்



இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பொது அமைப்புகளின் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் எனப் பலர் பங்கேற்ற இந்தக் கலந்துரையாடலின் நிறைவில் தமிழ்த் தேசிய பேரவையின் தலை வரும் எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டார். அதில்,

"அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த 2015 - 2019 ஆம்

07

## ஜனாதிபதியின் வசிப்பிடத்துக்கு அண்மையாகவும் படுகொலைகள்

### நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, பெப். 16

பாதாள உலகக் குழுக்களின் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களை நிறுத்திவிட்டதாக அரசாங்கம் மார்தட்டிக் கொண்டாலும் ஜனாதிபதி வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே பட்டப்பகலில் படுகொலைகள் அரங்கேறுகின்றன என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அவரின் கட்சியின் தலைமை பணிமனையில்

07

## நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து சட்டத்தரணிகள் இன்று விலகுவர்

கொழும்பு, பெப். 16

நாடு முழுவதும் உள்ள நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து இன்றைய தினம் சட்டத்தரணிகள் விலகுவர் என்று சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் 14 வருடங்களுக்குப் பின்னர் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் நடந்த கூட்டத்தில் நேரிலும் மெய்நிகர் வழியிலும் சுமார் 3 ஆயிரத்து 500

07

## வெடுக்குநாறிமலை சிவனுக்கு தடையின்றி சிவராத்திரி பூசை



வவுனியா, பெப். 16

பிரசித்தி பெற்ற வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலை சிவன் ஆலயத்தில் சிவராத்திரி பூசைகள் தடையின்றி நேற்று நடைபெற்றன.

பிற்பகல் 2 மணியளவில் ஆதி லிங்கேஸ்வரருக்கு

07

## 352 துப்பாக்கிகள் இதுவரை சிக்கின

கொழும்பு, பெப். 16

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் ரி-56 ரக துப்பாக்கிகள் உட்பட 352 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, 11 ரி-56 ரக

07

## இந்தியா - பாகிஸ்தான் போட்டியை நேரில் பார்வையிட்ட ஜனாதிபதி!



கொழும்பு, பெப். 16

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதிய போட்டியை நேற்றைய தினம் ஜனாதிபதி அநுர

07

## ஐ.எம்.எவ்.வின் பணிப்பாளர் இன்று வருகிறார்

கொழும்பு, பெப். 16

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்ரலினா ஜோர்ஜீவா இன்று திங்கட்கிழமை நாட்டுக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் புதன்கிழமை

07

## அரசின் செயல்பாடுகளுக்கான மக்கள் அங்கீகாரம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 16

அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கான மக்களின் அங்கீகாரம் 65 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று ஆசியாவின் அரச மற்றும் தனியார் துறைகள் தொடர்பான மூலோபாய பகுப்பாய்வு மற்றும்

07

## திருமுறிகண்டியில் நேற்று விபத்து ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

முல்லைத்தீவு, பெப். 16

கார் மோட்டார் சைக்கிளை மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ- 9 வீதியின் முல்லைத்தீவு - திருமுறிகண்டி பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மருத்துவர் ஒருவர் செலுத்திய கார் மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில், பயணித்த இருவர் படுகாயமடைந்தனர். மோதிய காரை செலுத்திய

07

## பிரிவினைவாத போக்கை தடுக்க மாகாண சபைகள் தேர்தலே தீர்வு

### அறிவுறுத்துகிறார் தயான் ஜயதிலக

கொழும்பு, பெப். 16

நாடு மீண்டும் ஒரு பிரிவினைவாத போக்கை நோக்கி நகர்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு நீண்டகாலமாக முடங்கிக் கிடக்கும் மாகாண சபைகள் தேர்தலை உடனடியாக நடத்துவதே சிறந்த தீர்வாகும் - என்று அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக அறிவுறுத்தியுள்ளார்.

78ஆவது சுதந்திர தினத்தின்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட

07

## மீளவும் மின்சார நெருக்கடியை மக்கள் எதிர்கொள்ள நேரிடும்

### இப்படி சொல்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, பெப். 16

நிலக்கரி இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் எதிர்வரும் ஜூலை மாதத்தின் இறுதி முதல் செப்ரெம்பர் நடுப்பகுதி வரை நாடு மிகப்பெரும் மின்சார நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் - இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகைக்கு பெற்ற காரை அடகு வைத்தவருக்கு வலை

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அநாதரவாக விடப்பட்டிருந்த சொகுசு காரை மீட்ட யாழ்ப்பாண பொலிஸார் அதனை நீர்கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருபவை வருமாறு,

நீர்கொழும்பில் கார்களை வாடகைக்கு விடும் நிறுவனத்திடம் கார் ஒன்றை பெற்ற நபர், அதனை யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரிடம் அடகாக வைத்து 80 இலட்சம் ரூபாய்க்கு மேல் பெற்றுள்ளார்.

உரிய காலப் பகுதிக்குள் வாடகைக்கு எடுத்த காரை நிறுவனத்திடம் ஒப்படைக்காதமையால் காரை வாடகைக்கு கொடுத்த நிறுவனம் அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தது.

இந்த நிலையில், குறித்த காரை வைத்திருந்த நபர் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், காரை வைத்திருந்த நபர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் காரை நிறுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார். இதையடுத்து, காரை மீட்ட பொலிஸார் அதனை நீர்கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நகுலேஸ்வரம் ஆலயத்தில் நேற்று தேர்த் திருவிழா!



யாழ்ப்பாணம், பெப். 16

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப்பெருமான் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காலை வேளை ஆரம்பமான அபிஷேகத்தைத் தொடர்ந்து ஸ்தம்ப பூசை வசந்த மண்டப பூசை என்பன நடைபெற்றன. இவற்றைத் தொடர்ந்து இரத பவனி நடைபெற்றது.

இந்தத் தேர்த் திருவிழாவில் பெருந்தொகையான அடியார்கள் பங்குபற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# மோட்டார் சைக்கிள் திருட்டு; தம்பதியர் உட்பட மூவர் கைது

வவுனியா, பெப். 16

வவுனியாவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கணவன், மனைவி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் வவுனியா சதொச வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டது. அதன், உரிமையாளர் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாட்டுக்கமைய, வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ. எஸ். வீரத்தினவின் கண்காணிப்பின் கீழ் விசேட சோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. மன்னார் - இரணை இலுப் பைக்குளத்தை சேர்ந்த 23 வயது இளைஞரும் 25 வயதான அவ ரின் மனைவியும் மற்றும் 31 வயதான நபரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (10)

# புளொட்டின் 11ஆவது மாநாடு

வவுனியா, பெப். 16

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) 11ஆவது மாநாட்டை எதிர்வரும் மார்ச் 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மத்திய குழுவின் இறுதிக்கூட்டம் நேற்றுமுன்தினம் அந்தக் கட்சியின் வவுனியா பணிமனையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிர்வாக ரீதியிலான பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. அத்துடன், கட்சியின் மாநாட்டை நடாத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

இதன்போது, 11ஆவது மாநாட்டை எதிர்வரும் 13, 14, 15ஆம் திகதிகளில் வவுனியாவில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

# வலி. வடக்கில் சில பகுதிகளை ஏப்ரல் மாதம் விடுவிக்கப்படும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16



வலி. வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளில் சில பகுதிகளை ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசாங்கம் என்ற வகையில் மக்களுடைய காணிகளை மக்களுக்கே பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக - வடக்கு மாகாணத்தில் மக்களுடைய காணிகள் பாதுகாப்பு தேவைக்காக படையினரின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்த நிலையில் மக்களுடைய காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் இருப்பது தொடர்பில் அரசாங்கம் என்ற வகையில் கரிசனை கொண்டுள்ளோம். வலி. வடக்கில் படையினர் வசமுள்ள தனியார் காணிகளை படிப்படியாக உரியவர்களுக்கு பெற்று கொடுக்கும் வேலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் வலி. வடக்கின் சில பகுதிகளை மக்களிடம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவின் அறிவுறுத்தலுக்கு அமைய பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருகிறது - என்றார்.

# வடக்கு ஆளுநரின் நடவடிக்கைகளால் பின்னாளில் பிரச்னைகளை சந்திப்பார்

## இப்படி எச்சரிக்கிறார் சுரேஷ் பிறேமசந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 16

வடக்கு ஆளுநர் இப்போது மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் பின்னொரு காலத்தில் நடக்கும் விசாரணைகளின்போது அவரும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு துணை சென்றார் என்பதையும் அதனால் ஏற்படப்போகும் பாதிப்புகளும் அவரையே சாரக் கூடும்", இவ்வாறு எச்சரித்திருக்கிறார் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் க. பிறேமச்சந்திரன்.

"தமிழ்த் தேசியத்தின்மீது பற்றுள்ளவராக இருந்த ஆளுநர் நா.வேதநாயகன், அதற்கு எதிராகச் செயல்படலாமா?" என்ற தலைப்பில் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே சுரேஷ் பிறேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களை சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாகாண சபை பொறுப்புகளை கையளித்துள்ளார் எனப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. கல்வி, விவசாயம், சுகாதாரம், உள்ளூராட்சி சபைகள் போன்ற பல்வேறுபட்ட பிரிவுகளுக்கு ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர்களை நியமித்துள்ளாரென அறிய முடிகிறது.

மாகாண சபை அதிகாரங்களை மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களே கையாளலாம் என்பதுடன் மாகாண சபை இயங்காத காலத்தில் அந்த அதிகாரங்களை ஆளுநர் முன்னெடுத்துச் செல்வார் என்பதைத்தான் மாகாண சபை சட்டம் கூறுகிறது. மாகாண சபைகள் சட்டத்தின் எந்த இடத்திலும் ஆளுநர் தனது அதிகாரங்களை பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கையளிக்கலாம் என்றோ அல்லது மாகாண சபை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலாம் என்றோ கூறப்படவில்லை.

சட்டம் அவ்வாறிருக்க, ஆளுநரானவர் ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர்களை மேற்குறிப்பிட்ட விடயதானங்களுக்குப் பொறுப்பாக நியப்பதென்பது சட்டவிரோதமானதும் தவறானதுமான நடவடிக்கையாகும்.

நீண்டகால நிர்வாக அனுபவங்களைக் கொண்ட ஆளுநர் வேதநாயகன், ஜே. வி. பி.யின் இந்தத் தவறான நடவடிக்கைகளை அவர்களுக்கு சுட்டிக் காட்ட வேண்டுமே தவிர, அதனை ஏற்றுக் கொண்டு செயல்படுத்துவதென்பது பின்னொரு காலத்தில் ஏற்படவிருக்கும் விசாரணைகளில் ஆளுநரும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு துணை சென்றார் என்பதையும் அதனால் ஏற்படப்போகும் பாதிப்புகளும் அவரையே சாரக் கூடும்.



மாகாண சபைத் தேர்தலை நடத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தைக் கையளிக்க வேண்டும் என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்வதை விடுத்து, அரசு செய்யும் பிழையான காரியங்களுக்கு முண்டுகொடுப்பதோ, செயல்படுத்துவதோ அறிவுபூர்வமான விடயமல்ல - என்றுள்ளது.

# நாவற்குழி திருவாசக அரண்மனையில் சிவராத்திரி தினம் சிறப்புறநடந்தது

யாழ்ப்பாணம், பெப். 16

சிவராத்திரி தினமான நேற்று நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவதட்சணாமூர்த்தி ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

இந்த வழிபாடுகளில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான அடியார்கள் 108 சிவலிங்கங்களுக்கு தண்ணீரால் அபிஷேகம் செய்தனர். அத்துடன், பல்வேறு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

# சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்துக்கு அடிக்கல்

வடமராட்சி, பெப். 16

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிளவில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் மு. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து, சுப்பர்மடம் சிறீ முனீஸ்வரர் ஆலய பிரதம குருக்கள் பிரம்மசிறீ சோ. துஷ்யந்த குருக்கள் ஆசி - சிறப்பு வழிபாடுகளுடன் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இ. சந்திரசேகர் முதல் அடிக்கல்லை நாட்டினார்.

பின்னர், யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன், நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் கிருஷ்ணன் அகிலன், வடமராட்சி வடக்கு, பிரதேச செயலாளர் ந. திருலிங்கநாதன், பருத்தித்துறை கிழக்கு கடற்றொழில் பரிசோதகர், மரியதாஸ் நாகேந்திரன், பருத்தித்துறை நகரபிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போல் உள்ளிட்டோர் அடிக்கற்களை நாட்டிவைத்தனர். (02-05-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.02.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 04

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## “தமிழ்த் தேசிய மொடல்” என்றால் என்ன?

தமிழ்நாட்டின் அதிகாரத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அரசியல் கருத்தியலாளர்கள் “திராவிட மொடல்“ என்னும் ஒன்றைப் பற்றி வாதிடுகின்றனர். தற்போது திராவிட முன்னேற்றக் கழகம் அவ்வாறானதொரு மொடலின் வழியாகவே வழிநடத்தப்படுவதாக வாதிடுகின்றனர். பி. ஜே. பி.யின், முக்கியமாக ஆர். எஸ். எஸ். அமைப்பின் தமிழ்நாட்டு கருத்தியலாளர்கள் அதனை பரிகசிக்கின்றனர் - அவர்களின் வாதத்தில், அங்கு “திராவிட மொடல்” என்று ஒன்றில்லை. கருணாநிதி குடும்பம் பிளஸ் பிராமணிய எதிர்ப்புத்தான் அவர்களிடமுள்ள மொடல் என்று கூறும் ஆர்.எஸ்.எஸ். கருத்தியலாளர்கள், தமிழ்நாடு எப்போதோ “இந்துத்வா” கருத்தியலுக்குள் வந்துவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு காலத்தில் ஆலயங்களை இடிக்க வேண்டும் என்றனர் இப்போதோ, ஆலயங்களைக் கட்டுவதில் போட்டியிடுகின்றனர். இந்து மதத்தைப் புறந்தள்ளி அவர்களால் செயல்பட முடியாமல் இருக்கிறது. ஏனென்றால், மக்கள் இந்து மதத்தோடு இருக்கின்றனர் - அந்த வகையில் கருத்தியல் ரீதியில் பி. ஜே. பி. எப்போதோ வென்றுவிட்டது. ஆனால், ஒரு நூற்றாண்டுகால எதிர்ப்பு அரசியல் வழியான கட்சி மரபொன்று இருப்பதால்தான், பி. ஜே. பி. அதிகாரத்தை கைப்பற்ற முடியாமல் இருக்கிறது. ஆனால் 1999இல், பி. ஜே. பி.யோடு இணைந்தும் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி அமைத்திருக்கிறதே - அவ்வாறாயின் அது என்ன மொடல் என்று கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் ஒரு கேள்வி எழுக்கிறது - இன்று தங்களைத் தமிழ்த் தேசியக் கட்சிகளாக அடையாளப்படுத்தும் அனைவரும் தமிழ்த் தேசியம் என்னும் சொல்லை தாராளமாகவே உச்சரிக்கின்றனர். இவர்கள் தமிழ்த் தேசியம் என்பதால் முன்வைக்க முயற்சிக்கும் அரசியல் வடிவம் என்ன? - அவ்வாறான வடிவமொன்றை முன்வைக்கும் ஆற்றல் இப்போதுள்ள அரசியல் கட்சிகள் எவற்றிடமாவது இருக்கிறதா?

இன்று அரசியல் அரங்கில் இருக்கும் கட்சிகளை எடுத்து நோக்கினால் அனைவருமே ஆறாவது திருத்தச் சட்டத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் செய்து தங்களின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்தியிருப்பவர்கள். “பிரிவினை கோரமாட்டோம்”, என்று சத்தியம் செய்திருப்பவர்கள். ஒருவர் வாதிடலாம் அதனை ஏற்றுக்கொண்டு போகவேண்டிய தேவையிருப்பதால்தான் அதனை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், கேள்வி பாராளுமன்றம் செல்லாமல் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்க முடியாதா? பதவிகள் இல்லாமல் போராட முடியாதா? முடியாது என்பதுதான் தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு. அவ்வாறாயின், ஏதோவொரு வகையில் இலங்கையின் அரசியல் கட்டமைப்புடன் இணைந்துதான் பயணிக்க வேண்டும் என்னும் யதார்த்தத்தை அனைவருமே ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இந்த இடத்தில் அரசியல் ரீதியில் இலங்கைத் தேசியம் என்னும் நிலைப்பாட்டையே அனைத்து கட்சிகளும் வரித்துக் கொண்டிருக்கின்றன.

அடுத்தது, அவர்களின் பொருளாதார புரிதல். இலங்கையின் அங்கமாக இருந்துகொண்டு வடக்கு, கிழக்கின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் என்பதுதான் இவர்களின் தமிழ்த் தேசிய பொருளாதார நிலைப்பாடு. அதாவது இலங்கை எவ்வாறான பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருக்கிறதோ அதனை அப்படியே விழுங்கிக் கொள்வது.

கலாசார ரீதியில் தமிழ்த் தேசியத்தை எவ்வாறு வரையறுக்க முடியும் - மதமற்றதாகவா அல்லது மதமுள்ளதாகவா? மதமுள்ளது என்றால் இந்து நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் - அவ்வாறில்லை நாங்கள் மத சார்பற்றவர்கள் என்றால் பின்னர் எதற்காக வேட்பாளர் பட்டியலை சமர்ப்பிப்பதற்கு முன்னர் ஆலய வழிபாடுகளில் ஈடுபட வேண்டும் - ஆலயங்களுக்கு நிதியளிக்க வேண்டும்? - கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஆலயங்களுக்கு நிதியளிக்காத பாராளுமன்ற உறுப்பினர்கள் யார்? அது தவறு என்று கூறிய பாராளுமன்ற உறுப்பினர்கள் யார்? அடுத்த கேள்வி, தமிழ்த் தேசியம் மதமற்றது என்றால் எதற்காக காவி தரித்தவர்களும் வெள்ளாடை அணிந்தவர்களும் அரச எதிர்ப்பு ஆர்பாட்டங்களின்போது, முன்னரங்கில் தேவைப்படுகின்றனர்?

அடிப்படையில் தமிழ்த் தேசியம் என்பது அரசாங்கத்தை எதிர்த்து வாக்குகளை பெறுவதற்கான ஓர் உத்தியாக மட்டுமே இருக்கிறது. இதன் காரணமாகத்தான் தேசிய மக்கள் சக்தி அடிமடியில் கைதுவிட்டதே என்னும் அச்சம் மேலிடுகின்றது. ஓர் அரசியல் நிலைப்பாட்டை கருத்தியல் ரீதியில் கலாசார ரீதியில் கட்டமைக்க முடிந்தால் மட்டுமே, அந்த அரசியலை ஒரு மொடலாக மாற்ற முடியும். தமிழ்த் தேசியத்துக்கு அவ்வாறான ஆற்றல் இல்லை.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஐரோப்பிய ஒன்றியம் கரிசனை

கொழும்பு, பெப். 16

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலீடாக அரசாங்கத்தால் புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார சேவைப் பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பதில் முகாமைத்துவ பணிப்பாளர் பாவோலா பம்பலோனி தீவிர கரிசனையை வெளிப்படுத்தியிருப்பதாக அறியமுடிகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை கூட்டு ஆணைக் குழுவின் 27ஆவது கூட்டத்தில் பங்கேற்பதற்காக கடந்த வாரம் நாட்டுக்கு வருகை தந்த ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார சேவை பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பம்பலோனி தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் இங்கு பல்வேறு தரப்பினருடன் சந்திப்புகளில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக அரசாங்கத் தரப்புக்கு அப்பால், எதிர்க் கட்சித் தலைவர், தமிழ் பிரதிநிதிகள், மலையக பிரதிநிதிகள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் என்று பல்வேறு தரப்பினருடனும் நடைபெற்ற சந்திப்புகளின்போது அரசாங்கத்தால் புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு குறித்து விரிவாக பேசப்பட்டதாக தெரியவருகிறது.

அதுமாத்திரமன்றி, இந்தச் சட்ட வரைவின் உள்ளடக்கம் பற்றி கேட்டறிந்த பாவோலா பம்பலோனி, அதன் பாரதூரத்தன்மை குறித்து தீவிர கரிசனையை வெளிப்படுத்தியதாகவும் அறியமுடிகிறது.

# நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட நிர்மல் தேவசிறி

### முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர எதிர்ப்பு

கொழும்பு, பெப். 16

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள கொலை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து பேராசிரியர் நிர்மல் தேவசிறி வெளியிட்ட கருத்துக்கள் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளன என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“நிர்மல் தேவசிறி இந்தத் தீர்ப்பை தவறு எனக் கூறி, தண்டனை பெற்றவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும் எனக் கோருவது நீதியை சவாலுக்கு உட்படுத்தும் செயலாகும்.

மூன்று ஆண்டுகால நீண்ட விசாரணை, தடயவியல் ஆதாரங்கள் மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் கம்பஹா மேல் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. நீதிமன்றத் தீர்மானத்தை விமர்சிப்பதன் மூலம் அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர முடியும்.

அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் நிட்டம்புவ பகுதியில் மிகக் கொடூரமாக தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இத்தகைய வெறுக்கத்தக்க செயல்களுக்கு நிர்மல் தேவசிறி போன்றவர்கள் பரப்பிய வெறுப்புணர்வே காரணம்”- என்றார். (எ)

# ராகமையில் 270 கிலோ கிராம் கஞ்சாவுடன் ஒருவர் சிக்கினார்



கொழும்பு, பெப். 16

ராகமை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 271 கிலோ கிராம் 835 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவு முன்னெடுத்து வருகிறது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 16 திங்கக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 04
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : சதுர்த்தசி




**மேடம்** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**இடபம்** கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். மாற்றம் ஏற்படும் நாள்.

**மிதுனம்** சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக்கொண்டிருக்காதீர்கள்.. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை குறை கூறுவார்கள்.

**கடகம்** உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களின் அரவணைப்பு இருக்கும். தாயாரின் உடல் நிலை சீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**சிம்மம்** ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

**கன்னி** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உங்களை சுற்றி இருப்பவர்களின் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். பழைய கடனைப் பற்றி யோசிப்பீர்கள். புது வேலை அமையும். நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர் வருகையால் வீடு களைகட்டும்.

**தனுசு** கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனகசப்புகள் நீங்கும். தோற்ற பொலிவு கூடும். நீண்ட நாள் பிரச்னை களுக்கு தீர்வு கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தாரை குறை கூறி கொண்டிருக்க வேண்டாம். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்** விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்** தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

# உற்பத்தித்திறன் செயல்பாடுகள் உள்ளத்திலிருந்து எழ வேண்டும்

## யாழ். அரசாங்க அதிபர் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

"உற்பத்தித்திறன் செயல்பாடுகள் உள்ளத்திலிருந்து எழ வேண்டும். இதன் பயன்கள் சேவை நாடிகளான பொதுமக்களை போய் சேர்வதிலேயே வெற்றி தங்கியுள்ளது"- இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"எமது மாவட்ட செயலகத்தை பொறுத்தவரை ஒவ்வொரு உற்பத்தித்திறன் செயல்பாடுகளின் ஊடாகவும் அரச செலவீனத்தை குறைத்துள்ளோம்.

உற்பத்தித்திறன் செயல்பாடுகள் ஒவ்வொன்றினதும் வெளியீடு ஏதோ ஒரு வகையில் பொதுமக்களுக்கு நன்மை பயப்பதிலேயே வெற்றி தங்கியுள்ளது"- என்றார். (எ)

# மன்னார் மருத்துவமனையின் உத்தியோகத்தர்கள் உற்பத்தித்திறன் செயல்பாட்டை பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், பெப். 16

உற்பத்தித் திறன் போட்டிக்கு விண்ணப்பித்த மன்னார் பொது மருத்துவமனையின் உத்தியோகத்தர்கள் அதற்கு முன்னேற்பாடாக யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் உற்பத்தித் திறன் செயல்பாடுகளை பார்வையிட நிர்வாக உத்தியோகத்தர் தலைமையில் மாவட்ட செயலகத்துக்கு வருகைதந்தனர்.

அத்தோடு, மன்னார் பொது மருத்துவமனை உத்தியோகத்தர்கள்- மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

பின்னர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரனுடனான கலந்துரையாடலில் மன்னார் பொது மருத்துவமனை பணிப்பாளர் எச். எம். அஸாத் ஹனிபாவும் இணைந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் உற்பத்தித்திறன் செயல்பாடுகள் மற்றும் 5எஸ் செயல்பாடுகள், மாவட்ட செயலக நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்துகொண்டதுடன், மேலதிக விளக்கங்களை முன்வைப் பின் ஊடகவும் அறிந்து கொண்டனர்.




உற்பத் தித்திறன் செயல்பாடுகளை பார்வையிட்டு விவரங்களை யும் செயல்பாடுகளையும் அறிந்துகொண்டனர். யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மானது 2020 ஆம் ஆண்டு உற்பத்தித்தித் திறன் போட்டியில் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்றது.(எ)

# மன்னாரில் சுற்றிவளைக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல் படகு!

## கடற்படையினரால் இருவர் கைது

மன்னார், பெப். 16

மன்னார் கடற்பரப்பில் போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்த'ப்பட்டதாக சந்தேசிக்கப்படும்டிங்கி பட கொண்றை கடற்படையினர் தமது பொறுப்பில் எடுத்துள் ளனர்.

குறித்த படகில் இருந்த இருவரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அந்த டிங்கி படகிலிருந்து போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் இரண்டு பொதிகள் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த படகும் சந்தேகநபர்களும் தற்போது கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (எ)

# "மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்"

யாழ்ப்பாணம், பெப். 16

மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகள் மற்றும் அவர்களுக்கான வாழ்வாதார தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதே முதன்மையான பணியாகும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

சமூக சேவைகள் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி தர்ஷினி கருணாரத்ன பங்குபற்றுதலுடன் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே யாழ். அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அத்தோடு, கொழும்பிலிருந்து வருகை தந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தை நடத்தியமைக்கு நன்றி கூறியதுடன், திணைக்களம் சார்ந்து ஆளணி வளப்பற்றாக்குறையை சுழற்சி முறையில் இடமாற்றங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அனைத்து உத்தியோகத்தர்களும் பயனடைந்து கொள்ள முடியும் எனவும் மேலும் சமூக சேவைகள் பணியானது மிகவும் கடினமான வித்தியாசமான பணியாகும் எனவும் குறிப்பிட்டார். சமூக சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கூடுதலான கவனம் செலுத்திவருவதனையிட்டு அரசாங்க அதிபர் பாராட்டினார்.

மேலும், திணைக்களங்களுடனான உற வுகளை மேலும் உத்தியோகத்தர்கள் பலப்படுத்திக்கொண்டு தங்களது பணிகளை தொடர வேண்டும் எனவும், பொதுமக் களுக்கு விரைவான மற்றும் பய னுள்ள சேவைகளை வழங்க வினைத்திறனாக செயல்பட வேண்டும் எனவும் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே. ஆரின் நிறைவேற்றதிகாரத்தை விட புதிய பயங்கரவாத சட்டம் ஆபத்தானது!

## லங்கா சமசமாஜ கட்சி

கொழும்பு, பெப். 16

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நடைமுறைப்படுத்தப்பட்டால் அது 1977 ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை விடவும் பெரும் ஆபத்துகளை ஏற்படுத்தும் என்று லங்கா சமசமாஜ கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

லங்கா சமசமாஜ கட்சியின் அரசியல் குழு மத்திய குழு உறுப்பினர் சந்தன ரணசிங்க நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகங்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

இந்த உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவானது நாட்டுக்கும் ஒட்டுமொத்த மக்களுக்கும் மட்டுமின்றி நாட்டின் இயற்கை வளங்கள் காடுகள் மற்றும் விலங்கினங்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சுற்றுச்சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு சர்வாதிகார சட்டமாகும். ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தவே இதனை முன்னெடுக்கின்றனர்.

இந்தச் வரைவு நடைமுறைக்கு வந்தால் ஜனநாயகம், மனித உரிமைகள் உள்ளிட்ட அனைத்து நற்பண்புகளும் முடக்கப்படும்.

மக்கள் ஆட்சி யாளர்களின் அடிமைகளாக மாறும் அவல நிலை ஏற்படும். குறிப்பாக, நாட்டின் உரிமைகளை வென்றெடுப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த இடது சாரி இயக்கத்தின் ஆரம்பகர்த் தாக்கள் என்ற ரீதியில் லங்கா சமசமாஜ கட்சி இந்த உத்தேச சட்டமூலத்துக்கு தனது பலத்த எதிர்ப்பை வெளியிடுகின்றது. மக்கள் ஒன்றிணைந்து இத னைத் தோற்கடிக்க வேண்டும் - என்றார்.

# வெவ்வேறு விபத்துகளில் மூன்று பேர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 16

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் மூவர் உயிரிழந்தனர்.

அம்பாறை - தமன பொலிஸ் பிரிவில் அம்பாறை - சியம்பலாண்டுவ வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

லொறியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. இதில், மோட்டார் சைக்கிளை செலுத்திய வரும் அவருடன் பயணித்தவரும் படுகாயமடைந்தனர். இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் 20, 22 வயதினரே உயிரிழந்த னர். இவர்கள் அக்கரைப் பற்றை சேர்ந்வர்களாவர்.

இதேவேளை, மாத்தறை பொலிஸ் பிரிவில் மாத்தறை - காலி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது. இதில், கோட்டகொடை யைச் சேர்ந்த 40 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.

# 560 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, பெப். 16

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் 560 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 19 பேர் நேரடி குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 312 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 113 பேரும் கைது செய்யப்பட்டனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 374 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 69 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 102 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இறந்த கோழிகளை இறைச்சியாக்கி விற்ற இருவர் கைது

கொழும்பு, பெப். 16

ஏற்கனவே உயிரிழந்த கோழிகளை இறைச்சியாக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் - ஆனமடுவ பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுமார் 75 கிலோ இறைச்சி இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இறந்த கோழிகளை விலங்குகளுக்கு உணவாகக் கொண்டு செல்வதாகக் கூறி அவை விற்பனை செய்யப்பட்டன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை ஆனமடுவ நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




களுத்துறை துப்பாக்கிச்சூடு:

# கொலையாளிகள் பயன்படுத்திய மோ. சைக்கிள் பொலிஸாரால் மீட்பு

கொழும்பு, பெப். 16

களுத்துறையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்று காலை பண்டாரகமவில் மீட்கப்பட்டது.

களுத்துறை வடக்கில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 32 வயது நபர் உயிரிழ்நதார்.

இந்த நிலையிலேயே பண்டாரகம - ஹொரன வீதியின் கொத்தலாவல சந்திக்கு அருகிலுள்ள வயல்வெளியில் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் அநாதரவாக நின்ற நிலையில் மீட்கப்பட்டது.

அத்துடன், மோட்டார் சைக்களிலிருந்து கறுப்பு நிற தலைக்கவசம், கறுப்பு நிற ஜக்கட் மீட்கப்பட்டன. மேலும், சற்றுத் தூரத்தில் அரிசி பை ஒன்றிலிருந்து ஒரு ஜோடி சப்பாத்தையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தேர்தல் வாக்குறுதியை மீறும் செயல்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, பெப். 16

மின்சார சபையால் 2026 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மின்சார கட்டணத்தை 13.56 சதவீதத்தால் அதிகரிக்க முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதியை மீறும் செயல் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் இட்டுள்ள பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மீண்டும் ஒரு முறை, மின்சார கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைப்போம் என்ற அநுர குமார திஸநாயக்க



தேர்தல் மேடைகளில் வழங்கிய தேர்தல் வாக்குறுதியை நேரடியாக மீறுவதாக இந்தத் தீர்மானம் அமைந்துள்ளது.

தொடர்ந்தும் இவ்வாறு பொய்களால் மக்களை ஏமாற்றுவதை நிறுத்தி, அநுர குமார திஸநாயக்க வழங்கிய வாக்குறுதியை எப்போது நிறைவேற்றுவார் - என்றும் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பெருந்தோட்ட பகுதி முன்பள்ளிகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்

## முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம் கோரிக்கை

நுவரெலியா, பெப். 16

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள முன்பள்ளி களை அரசாங்கம் பொறுப் பேற்று மத்திய மாகாணத்துக்கு கீழ் கொண்டுவர வேண்டும் என்று முன்பள்ளி ஆசிரியர் ஒன் றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

நுவரெலியா - கொட்டக்க லையில் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலா ளர் சந்திப்பில் குறித்த ஒன்றி யம் இவ்வாறு கோரிக்கை முன் வைத்தது.

இது தொடர்பில் ஒன்றியத் தின் தலைவர் யோகேஸ்வரி கூறுகையில், "மலையக பெருந் தோட்ட பகுதிகளில் உள்ள முன்பள்ளி களை சுமார் 20 வரு டங்களாக நடத்தி வருகிறோம். அரசாங் கத்தின் ஊடாக கிடைக்கும் வளங்கள் எதுவும் எமக்கு கிடைப்பதில்லை.

மலையகத்தில் உள்ள மாண வர்களை கல்வித்துறையில் முன் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வருகி றோம். தோட்டப் புறங்களில் எமது செயல்பாட்டை முன்னெ டுக்க பாரிய சவாலாக உள்ளது. தோட்ட நிர்வாகங்கள் தடை யாக இருந்து வருகின்றன.

எமது முன்பள்ளி மாணவர் களுக்கு அரசாங்கம் இதற்கான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்"- என்றார். (எ)

# கல்குவாரி விபத்தில் சிக்கி இரு தொழிலாளர்கள் பலி!

கொழும்பு, பெப். 16

லியங்கஹவெல, மாபிட்டிய கல்குவாரியில் பணியாற்றி வந்த இரு தொழிலாளர்கள் அங்கு மேற்கொள்ளப்பட்ட வெடி வைப்பின் போது மண் மற்றும் கற்களுக்குள் சிக்கி உயிரிழந்த னர்.

பண்டாரவளை - பூனா கலை வீதியின் 16-17 கிலோ மீற்றர் தூண்களுக்கு இடையில் இந்த கல்குவாரி அமைந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங் களை மீட்டெடுப்பதற்காக இராணுவத்தினரின் உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவித் துள்ளது. (எ)

# "போதையால் மூழ்கிய சமூகத்தை மீட்போம்"

## மருதமுனையில் நூல் வெளியீடு



அம்பாறை, பெப். 16

மருதமுனையைச் சேர்ந்த ஊடகவியலாளரும் எழுத்தாள ருமான ஏ. ஆர். அஹமட் நபாயிஸின் 7ஆவது நூலான "போதையால் மூழ்கிய சமூ கத்தை மீட்போம்" நேற்று முன் தினம் சனிக்கிழமை மருத முனை கலாசார மத்திய நிலை யத்தில் வெளியிடப் பட்டது.

மருதமுனை ஆவணக்காப் பக வெளியீடாக வந்துள்ள இந்த நூல், உலகளவில் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள போதைப்பொருள் மற்றும் அபாயகர மருந்து பயன்பாட் டின் தாக்கங்களை ஆய்வு செய்து, அதிலிருந்து சமூ கத்தை மீட்டெடுக்க வேண் டிய அவசியம் குறித்து விரி வாக எடுத்துரைக்கிறது.

முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகள், விழிப்புணர்வு முயற்சிகள், சமூக-மத-கல்வி அமைப்புக ளின் பங்கு ஆகி யவை 120 பக் கங்களைக் கொண்ட இந்த நூலில் ஆழ மாக விளக்கப்பட்டுள் ளன. இது சமூக விழிப்பு ணர்வை உரு வாக்கும் முக்கியமான ஆக்க மாக கருதப்படுகிறது. (எ-06)

# புதையல் தோண்டிய 6 பேர் கைதாகினர்

பதுளை, பெப். 16

பதுளை, லுணுகலை, புளு கொல்ல பகுதியில் புதையல் தேடும் நோக்கில் அகழ்வுப் பணிகளில் ஈடு பட்டிருந்த ஆறு பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

லுணுகலை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப் படையில், புளு கொல்ல பகுதியில் உள்ள கும்பக்கன் ஓயாவை அண் மித்த பாதுகாக் கப்பட்ட வனப் பகுதியில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவ ளைப்பின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமி ருந்து அகழ்வுப் பணிகளுக்கு பயன் படுத்தப்பட்ட சில உபகரணங்களையும் பொலி ஸார் கைப்பற்றினர். (எ)

# நுவரெலியா, மாத்தளைக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

கொழும்பு, பெப். 16

நாட்டில் நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக நுவரெ லியா மற்றும் மாத்தளை மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் வெளியிட்டுள்ள அறிக் கையின்படி, நுவரெலியா - வலப் பனை மற்றும் நில்தண் டாஹின்ன பகுதிக்கு இரண் டாம் நிலை மண்சரிவு அபாய எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

அத்துடன், மாத்தளை - வில்கமுவ பகுதிக்கு முதலாம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

நிலத்தில் வெடிப்புகள் தோன்றுதல், மரங்கள் அல்லது மின் கம்பங்கள் சாய்வடைதல் மற்றும் நீரூற்றுகள் திடீரென தோன்றுதல் போன்ற அறிகு றிகள் தென்பட்டால் அங்கி ருந்து உடனடியாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளது.

மண்சரிவு தொடர்பான ஏதேனும் அவசர அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலையத்தையோ அல்லது அந்தந்த பகுதி கிராம உத்தியோ கத்தரையோ தொடர்பு கொள் ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளது. (எ)

# 9 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகையை திருடியவர் கைது

ஹற்றன், பெப். 16

ஹற்றன் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வீடொன்றில் சுமார் 9 இலட்சம் ரூபாய்க் கும் அதிக பெறுமதியான தங்க நகைகளை திருடிச் சென்ற நபர் ஒருவரை ஹற் றன் பொலிஸார் கைது செய்தனர்.

ஹற்றன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுசுந்தாச வுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முன்னெ டுக்கப்பட்ட சுற்றிவளைப் பின் போது குறித்த சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள் ளார்.

இதன்போது, அவரால் திருடப்பட்ட 9 இலட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான தங்க நகைக ளும் மீட்கப்பட்டன.

சந்தேக நபரை ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் வெள் ளிக் கிழமை ஆஜர்படுத்திய போது, அவர் நகையை திரு டிய குற்றத்தை ஒப்புக்கொண் டார்.

இதனைத் தொடர்ந்து, அவரை ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவித்து நீதிவான் உத்தர விட்டார். (எ)

# திருமலை, மட்டக்களப்பில் தொடர்ந்து மழை பெய்யும்

கொழும்பு, பெப். 16

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்க ளம் எதிர்வுகூறியுள்ளது.

நேற்று அதிகாலை விடுக்கப் பட்ட வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோண மலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பல தடவை கள் மழை பெய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதே சங்களில் பல இடங்களில் பிற் பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படு கின்றது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ)

வாகனம் மோதி காயமடைந்த

# சிறுத்தை குட்டியை காப்பாற்றிய வனஜீவராசி திணைக்களத்தினர்

ஹற்றன், பெப்.16

வட்டவளை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வாகனத்தில் மோதி காயம டைந்த சிறுத்தை குட்டியை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் காப்பாற்றி மீட்க நடவடிக்கை எடுத்தனர்.

வட்டவளை பகுதியில் உள்ள ஹற்றன்- கொழும்பு பிரதான வீதியின் தியகல பகுதி யில், சிறுத்தை குட்டி ஒன்று வாகனத்தில் மோதி கிடப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பொலிஸார், சம்பவ இடத்துக்குச் சென்று இது குறித்து விசாரணை மேற் கொண்டு நல்லதண்ணி வன ஜீவராசிகள் திணைக்கள அதி காரிகளுக்கு தகவல் வழங்கினர்.

தொடர்ந்து நல்லதண்ணி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து சிறுத்தை குட் டியை பாதுகாப்பாக மீட்டு சிகிச்சைக்காக ரந்தெனிகல கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். (எ)

# கடற்கரை பூங்கா திறப்பு




சாய்ந்தமருது, பெப். 16

அரசாங்கத்தின் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் 100 பசுமையான கடற்கரை பூங்காக்களை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமை வாக சாய்ந்தமருது பகுதியில் பசுமையான கடற்கரை பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திம்பு...

ஆண்டு காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட ஏக்கிய இராஜ்ய அரசமைப்பு ஒற்றையாட்சியாக இருப்பதால் அதனை அடியோடு நிராகரிக்க அனைத்து தரப்புகளும் முடிவெடுத்துள்ளன. அத்துடன், தமிழ் மக்களின் அபிலாசையான திம்பு கோட்பாடுகளை முழுமையாக அனுபவிக்கும் விதத்திலான சுயாட்சி யோசனைகளை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற அரசியல் தரப்புகள், அமைப்புகள், புத்திஜீவிகள் அனைத்துதரப்பினர் களையும் கொண்ட உறுப்பினர்கள் பொதுச் சபையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஓர் அரசியல் குழு அமைக்கப்படும். இந்த அரசியல் குழு திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் சுயாட்சியை முழுமையாக அனுபவிக்கக்கூடிய ஓர் அரசமைப்பு யோசனைகளை தயாரிப்பதற்கு செயல்படும்.

அந்த யோசனைகளை அரசியல் குழு வரையறை செய்த பின்னர் பொதுச் சபைக்கு மீள வழங்கப்படும். பொதுச் சபையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் அதனை மக்கள் மட்டத்தில் கொண்டுசெல்ல முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் குழு எவ்வாறு செயல்பட வேண்டும் என்று ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

பிரதானமாக, தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக் கப்பட்ட வரைவை அடிப்படையாகக் கொண்டு ஆலோசனைகளை பெறுவது என்றும் மேலதிகமாக வேறு யோசனைகள் இருந்தால் அந்தக் குழுவுக்கு வழங்கி அனைத்தையும் கொண்டதான ஒரு பொது யோசனை தயாரிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும், இன்றைய தினம் (நேற்று) பொதுச் சபை அங்கீகரிக்கப்பட்டாலும்கூட இந்தக் கூட்டத்தில் பங்கேற்காத அரசியல் கட்சிகள், அமைப்புகள், புத்தி ஜீவிகள் எதிர்காலத்தில் கலந்து கொள்ள விரும்பினால், அதற்கான கதவு திறந்தே இருக்கும். அனைவரையும் அரவணைத்து தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பலமாக முன்வைக்கும் முயற்சியாகவே இது இருக்கும் - என்றார்.

## நீதிமன்ற...

சட்டத்தரணிகள் பங்கேற்றிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு - பத்தரமுல்லை - அக்குரேகொடையில் சட்டத்தரணியும் அவரின் மனைவியும் கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே சட்டத்தரணிகள் இன்றைய தினம் நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து விலகுகின் றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 352 துப்பாக்கிகள்...

துப்பாக்கிகள், 12 கைத்துப்பாக்கிகள், 7 ரிவால் வர்கள், 322 பிற வகையான துப்பாக்கிகள் கைப்பற்றப் பட்டன.

இது குறித்து கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் சஞ்சீவ மெதிவத்த இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின்...

நேற்றைய தினம் நடைபெற் நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக் கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த காலங்களில் "தினசரி துப்பாக்கிச் சூடுகளை தடுத்துவிட்டோம்" என அமைச்சர்கள் கூறி வந்த நிலையில், தற்போது ஜனாதிபதி வசிக்கும் பெலவத்தை பகுதியிலேயே சட்டத்தரணியும் அவரின் மனைவியும் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஜனாதிபதியின் வீட்டின் முன்னாலேயே ஒரு சட்டத்தரணிக்கு பாது காப்பு வழங்க முடியாவிட்டால், இந்த நாட்டில் சாதா ரண குடிமகனின் பாதுகாப்பு நிலை குறித்து எதனைப் பேசுவது.

"அரசாங்கம் தற்போது திட்டமிட்ட முறையில் சட்டத்தரணிகள் மற்றும் மருத்துவர்களை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மருத்துவர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடினால் மக்கள் அவர்களுக்கு எதிராகத் தீர்மானம் எடுப்பார்கள் என்று சுகாதார அமைச்சர் அச்சுறுத்துவது, மக்களைத் தூண்டிவிட்டு மருத்துவர்கள்மீது தாக்குதல் நடத்தும் ஒரு சூழ்ச்சி" அண்மைக் காலங்களில் நீதிமன்ற வளாகத்துக்குள் ளேயே கொலைகள் நடக்கின்றன. சட்டத்தரணிகள் தாக்கப்படுகின்றனர். இவை அனைத்தும் நீதித்துறை மற்றும் சட்ட ஒழுங்கின் வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் கொலை தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பை அரசாங்கத் தரப்பினர் விமர்சிப்பதன் மூலம், கொலையாளிகளை பாதுகாக்கவும் அராஜகத்தை நியாயப்படுத்தவும் அரசாங்கம் முயல்கிறது. கஞ்சா தோட்டங்களை முற்றுகையிடச் செல்லும் பொலிஸா ரைத் தாக்கும் பின்னணியைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று சபையில் உள்ளனர். 88-89 காலப்பகுதியில் வன்முறை அரசியலில் ஈடுபட்ட வர்களே இன்று ஆட்சியில் இருப்பதால் அவர்களுக்குத் தெரிந்த ஒரே மொழி அடக்குமுறை மட்டுமே - என்றார்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் யோசனைக்கு கடும் அதிருப்தி

### ஐ. நா. சிறப்பு அறிக்கையாளர்கள் கூட்டு அறிக்கை

கொழும்பு, பெப். 16

இலங்கையின் புதிய பயங்கர வாத எதிர்ப்பு சட்டத்தின் உள்ள டக்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் கள் கடும் அதிருப்தி வெளியிட் டுள்ளனர்.

தன்னிச்சையான தடுப்புக் காவல் தொடர்பான பணிக்குழு, கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது தன்னிச்சையான காணாமல் போதல்களுக்கான பணிக்குழு, நீதிக்கு புறம்பான மரணதண்ட னைகள், மனித உரிமைகள் பாது காவலர்கள், தனியுரிமை, சித்திர வதை தொடர்பான சிறப்பு அறிக்கையாளர்களே கூட்டு அறிக்கை மூலமாக அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத் தின் தற்போதைய கட்டமைப்பு "குறிப்பிடத்தக்க வகையில் தெளி வற்றதாகவும், பரந்ததாகவும் உள்ளது" என்று சுட்டிக்காட்டிய அவர்கள், இது சிவில் சமூகம், மனித உரிமைகள் பாதுகாவலர் களை குறி வைக்கப் பயன்படுத் தப்படலாம் - என்றனர்.

இதேவேளை, பயங்கரவாதத் தின் முன்மொழியப்பட்ட வரை யறை, சட்டபூர்வமான கொள் கையை பூர்த்தி செய்யத் தவறி விட்டது. இந்த வரையறையை, மரணம், கடுமையான உடல் காயம் அல்லது பணயக்கைதிகள் பிடிப்பு உள்ளிட்ட நடத்தைக ளுக்கு மட்டுப்படுத்த வேண்டும் - என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## ஐ.எம்.எவ்.வின்

வரை அவர் நாட்டில் தங்கியிருக்கும் அவர், டித்வா புயலை அடுத்து ஏற்பட்ட பேரிடர்களால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் அவதானிக்கவுள்ளார்.

அத்துடன், இலங்கையை மீண்டும் வழமை நிலைக் குக் கொண்டு வருவதற்கு சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கக்கூடிய ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரை யாடுவார் - என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசின்...

ஆலோசனைகளை வழங்கும் சுயாதீன நிறுவனமான வெரிட்ரே றிசேர்ச் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் "கெலப்" பாணியிலான "நாட்டின் மனநிலை" எனும் சமீபத்திய கருத்துக்கணிப்பு ஆய்வின் ஊடாகவே இந்தத் தகவல் கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 4 வருடகால கருத்துக்கணிப்புகளில் நாட் டின் நிலைமை குறித்த மக்களின் திருப்தி நிலையானது 50 சதவீதத்தை விடவும் விஞ்சிய முதல் சந்தர்ப்பம் இது என்று அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு வருடத்துக்கு முன்னர் காணப்பட்ட 62 சதவீத மெனும் மக்கள் அங்கீகார வீதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் அதிகமாகும்.

இதேவேளை, அரசாங்கத்தின்மீதான அதிருப்தி வீதம் 2025 பெப்ரவரியில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய கருத்துக் கணிப்பில் இருந்ததைப் போலவே குறைவாகவும் - மாற்றமின்றியும் காணப்படுகிறது.

வெரிட்ரே றிசேர்ச்சின் தகவலின்படி, இந்தக் கருத்துக்கணிப்பின் நான்கு வருட வரலாற்றில் முதல் முறையாக, தற்போதைய பொருளாதார நிலைமைகள் "நன்று" அல்லது "மிகவும் நன்று" என மதிப்பிட்டவர்க ளின் எண்ணிக்கை, அதனை "மோசம்" என மதிப்பிட்ட வர்களின் எண்ணிக்கையை விட அதிகரித்துள்ளது. அத்துடன், பொருளாதார கண்ணோட்டம் குறித்த கருத்துகளும் மேம்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், பொருளாதாரம் "மேம்பட்டு வருகிறது" எனக் கூறியவர்களின் எண்ணிக்கை ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த 55 சதவீதத்தில் இருந்த போதிலும் தற்போதைய கருத்துக்கணிப்பில் 64 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 24 முதல் பெப்ரவரி 03 ஆம் திகதி வரை, நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 48 பேரிடம் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இந்தியா...

குமார திஸநாயக்க நேரில் பார்வையிட்டார்.

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நாட்டில் நடைபெறுகிறது. நேற்றைய தினம் கொழும்பு ஆர். பிரே மதாஸ விளையாட்டரங்கில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. இந்தப் போட்டியை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மைதானத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

முன்னதாக இந்திய மற்றும் பாகிஸ்தான அணிக ளுக்கு இடையிலான போட்டியை கொழும்பில் நடத்து வதற்கு இராஜதந்திர ரீதியிலான காத்திரமான உரையா டல்களை ஜனாதிபதி முன்னெடுத்திருந்தார். இதன் பிரதிபலனாக இரு அணிகளும் இலங்கையில் போட்டியிடுவதற்கு இணங்கியமை குறிப்பிடத்தக்கது.

## பிரிவினைவாத...

"கரிநாள்" போராட்டங்கள் நாட்டில் மீண்டும் பிரிவினைவாத கோரிக்கைகள் தலைதூக்குவதற்கான அபாயத்தை வெளிப்படுத்தியுள்ளன. கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற இந்தப் போராட்டங்களில் "வெளியக சுயநிர்ணய உரிமை" கோரும் பதாகைகள் ஏந்தப்பட் டிருந்தமை ஒரு தீவிரமான அரசியல் சமிக்ஞை என்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது கூறினார்.

மேலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் பிரிவினைவாத கோரிக்கைகளுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த நிலைமையை கட்டுப்படுத்து வதற்காக, முடங்கிக் கிடக்கும் மாகாண சபைகள் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஜனநாயக ரீதியான அதிகாரப் பகிர்வு, மக்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதன் மூலமே இத்தகைய தீவிரமான கோரிக்கைகளை தணிக்க முடியும். இதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் கட்சிபேதமின்றி ஓரணியில் திரள வேண்டும் - என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## மீளவும்...

கூறினார்.

தொடர்ந்தும், இந்த ஆண்டில் 212 நாட்களுக்கு மட்டுமே போதுமான நிலக்கரி தற்போது கையிருப்பில் உள்ளது. அந்த 212ஆவது நாள் ஜூலை 31 ஆம் திகதி யுடன் முடிவடைகிறது. தென்மேற்கு பருவமழை காரணமாக செப்ரெம்பர் நடுப்பகுதி வரை நிலக்கரியை இறக்க முடியாது.

இதனால் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் ஒன்றரை மாதங்களுக்கு மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்படும். இந்த நெருக்கடியால் நாடு முழுவதும் நீண்டநேர மின்தடை ஏற்படலாம் அல்லது ஓர் அலகு மின்சாரத்தின் விலை 90 ரூபாய் வரை அதிகரிக்கப் பட்டு, மின்கட்டணங்கள் மிகப்பெரிய அளவில் உயர்த் தப்படலாம் - என்றார்.

## வெடுக்குநாறி...

விசேடபூஜைை, அனுட்டானங்கள் நடைபெற்றன. இதில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதேநேரம், நேற்றைய தினம் காலை முதல் அந்தப் பகுதியில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டி ருந்தனர். எனினும், எந்தத் தலையீடும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## திருமுருகண்டி...

மருத்துவரே காயமடைந்த இருவரையும் உடனடி யாக மருத்துவமனையில் கொண்டு சென்று சேர்த்தி ருந்தார். எனினும், அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். மற்றை யவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

காரை செலுத்திய மருத்துவர் மாங்குளம் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# டிஜிற்றல் அடையாள அட்டைகளை ஏப்ரல் முதல் வழங்க அரசு திட்டம்

கொழும்பு, பெப். 16

தனித்துவமான டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்தை எதிர்வரும் ஏப்ரல் நடுப்பகுதியில் தொடங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக இன்போசிஸ், ரி. சி. எஸ்., புரோட்டியன், ரெயில்டெல் மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் ஆகிய ஐந்து இந்திய நிறுவனங்கள் முன் தகுதி பெற்றுள்ளன.

இதன்படி முதன்மை அமைப்பை ஒருங்கிணைக்கும் நிறுவனத்தை இந்திய அரசாங்கம் தெரிவு செய்து வருகிறது. இதே வேளை, உள்நாட்டு பராமரிப்பு சேவை வழங்குநரை இலங்கை அரசாங்கம் இன்னும் தெரிவு செய்யவில்லை.

இதற்கமைய முதல் டிஜிற்றல் அடையாள அட்டை 2026-ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் MOSIP (Modular Open-Source Identity Platform) எனும் திறந்தநிலை மென்பொருள் தளத்தை அடிப்படையாகக் கொண் டது. இது செலவைக் குறைப்பதோ டு நவீன தொழில்நுட்ப வசதிகளையும் வழங்கும். மக்கள் தங்களது டிஜிற்றல் அடையாள அட்டையை "e-Locker" என்ற செயலி மூலம் அணுகலாம்.

இது கியூ. ஆர். குறியீடு மற்றும் முக அங்கீகார வசதிகளைக் கொண்டிருக்கும். டிஜிற்றல் முறையில் பயன்படுத்த விரும்பாதவர்களுக்கு அச்சிடப்பட்ட அட்டைகளும் வழங்கப்படும். புதிய டிஜிற்றல் அடையாள அட்டை வந்த பிறகும், தற்போதுள்ள பழைய தேசிய அடையாள அட்டைகள் அடுத்த 3 முதல் 5 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். மக்கள் உடனடியாக மாற்ற வேண்டிய அவசியமில்லை.

இதற்கான மென்பொருள் தளம் தயாரானதும் மாகாண சபைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் தரவு சேகரிப்பு பணிகள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மின்சார கட்டண திருத்தம் மக்களிடம் கருத்து கோரல்

கொழும்பு, பெப். 16

இலங்கை மின்சார சபை அதன் செலவுகளை ஈடுகட்டுவதற்காக மின்சார கட்டண திருத்தத்தை முன்மொழிந்துள்ளது.

மின்சார சபையின் உற்பத்தி மற்றும் விநியோக செலவுகளை நிர்வகிப்பதற்காக இந்த கட்டண திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களின் கருத்துகளைக் கோரியுள்ளது.

## சிறீ லங்கன் எயார்லைன்ஸ் சீரமைப்பு தனியாரையே இலாபமடைய செய்யும்

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 16

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைப்பதாகக்கூறி, மக்களின் வரிப் பணத்தைப் பயன்படுத்தி சில தனியார் நிறுவனங்கள் இலாபமடைய வழிவகை செய்யப்படுகிறது எனறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

சிறீ லங்கன் எயார்லைன்ஸின் பெறுமதியான பிரிவுகளைத் தனியார் நிறுவனங்கள் இலாபமீட்டும் வகையில் கைமாற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த நிறுவனத்தின் 250 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகளை குறைந்த விலையில் விற்பனைக்கு விடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் திரட்டப்படும் பணத்தைக் கொண்டு நிறுவனத்தின் கடன் சுமையைக் குறைப்பதே அரசாங்கத்தின் திட்டம் - என்றும் நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவித்தார்.

### துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடையோர்

## சிறாருடன் தொடர்புபடும் பணிகளில் ஈடுபடுவதை தடுக்க அனுமதி கோரல்

கொழும்பு, பெப். 16

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புகளை கொண்டவர்கள், சிறுவர்களுடன் நேரடியாக தொடர்புடைய பணிகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான புதிய உத்தரவுக்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பிரீத்தி இனோகா ரணசிங்க இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த உத்தரவு முதல் கட்டமாக ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சுகள், நன்னடத்தை திணைக்களம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியவற்றின் ஊழியர்களுக்குப் பொருந்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டவர்களின் கைரேகையை அடிப்படையாகக் கொண்ட தரவுத்தளம் மூலம் இந்தத் தடை அமுல்படுத்தப் படும் என்று பிரீத்தி இனோகா கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த 2025 ஆம் ஆண்டில், சிறுவர்கள்மீதான துன்புறுத்தல்கள் தொடர்பில், 10 ஆயிரத்து 455 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றில், பாலி யல் துன்புறுத்தல்கள் தொடர்பான 545 சம்பவங்களும் அத்துடன், 38 பாலியல் வன்புணர்வு சம்பவங்களும், சிறுவர் திருமணங்கள் 9 உம் பதிவாகின என்றும் தெரிவித்தார்.

## கொழும்பு இரட்டைக்கொலை சந்தேகநபர்கள் நால்வர் கைது

கொழும்பு, பெப். 16

கொழும்பு - பத்தரமுல்லை - அக்குரேகொடை இரட்டைக்கொலை தொடர்பில் சந்தேகநபர்கள் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அக்குரேகொடையில் சிறப்பு அங்காடி ஒன்றின் வாகன தரிப்பிடத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் சட்டத்தரணி ஒருவரும் அவரின் மனைவியுமே சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரட்டை கொலைக்கு பாவித்த கார் எரிந்த நிலையில் மீட்பு!

கொழும்பு, பெப். 16

கொழும்பு - பத்தரமுல்லை - அக்குரேகொடையில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட கார் தீயில் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காலி- அகலிய குட்டியாவத்தை பகுதியிலேயே குறித்த கார் கண்டுபிடிக்கப்பட்டதாக நுகேகொடை பிரிவு குற்றப் புலனாய்வு பணியகம் தெரிவித்துள்ளது.

சட்டத்தரணி புத்திக மல்லவராச்சி, அவரின் மனைவியின் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இந்தக் கார் புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரட்டைக் கொலைக்கு, தற்போது வெளிநாட்டில் மறைந்திருக்கும் பாதாள உலகக் குழு உறுப்பினர் "கரந்தெனிய சுத்தா" என்று அழைக்கப்படும் ஜெயலத் சில்வா காரணமாக இருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்த சட்டத்தரணி, "கரந்தெனிய சுத்தா" சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தார். பின்னர்,

அவரின் எதிரியான "லொக்கு பெட்டி" எனப்படும் குற்றவாளியின் வழக்குகளுக்காக முன்னிலையானமையும் தெரியவந்துள்ளது.

கரந்தெனிய சுத்தா பற்றிய தகவல்களை, உயிரிழந்த சட்டத்தரணி லொக்கு பெட்டிக்கு வழங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில்,

சுத்தாவின் தரப் பினரால் இந்த கொலை சம்பவம் அரங்கேற்றப்பட்டிருக்கலாம் என பொலிஸார் முன்னர் தெரிவித்திருந்தனர்.

## சாதாரண தர பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி!

கொழும்பு, பெப். 16

நாளைய தினம் ஆரம்பமாகவுள்ள க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் இறுதி செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 3 ஆயிரத்து 545 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பொலிஸ், முப்படைகளின் ஒத்துழைப்புடன் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏதேனும் அவசர நிலைகள் ஏற்பட்டால் அவற்றை எதிர்கொள்ளவும்,

போக்குவரத்து வசதிகள் குன்றிய பகுதிகளிலுள்ள மாணவர்களை பரீட்சை நிலையங்க ளுக்கு அழைத்துச் செல்வதற்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர்களால் தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட கட்டாய ஆவணங்களை இழந்த மாணவர்களுக்காக விசேட சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டையை இழந்த மாணவர்கள், கடவுச்சீட்டு அளவிலான இரண்டு புகைப்படங்களை சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபரிடமும், தனியார் விண்ணப்பதாரிகள் கிராம சேவகரிடமும் அந்தப் புகைப்படங்களில் கையொப்பம் பெற்று சான்றுப்படுத்த வேண்டும்.

சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்து மூன்று மாதங்களுக்குள் அதன் பெறுபேறுகளை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமது எண்ணத்தை வெளிப்படுத்தவும் மக்கள் அஞ்சும் நிலைமையே ஏற்படும்

### முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, பெப். 16

நாட்டில் யுத்தம் நடைபெற்றபோது அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாத ஒழிப்பு சட்டத்தை விட, நிறைவேற்றதிகாரத்துக்கு அதியுச்ச அதிகாரங்கள் கொண்டதாக தற்போதைய அரசாங்கத்தால் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டால் எதிர்காலத்தில் ஊடகங் கள் மாத்திரமின்றி, மக்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்தக்கூட முடியாத நிலைமை ஏற்படுமென முன்னாள் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத சட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1979இல் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன அப்போதைய காலகடத்தில் காணப்பட்ட மிகப் பயங்கரமான நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காகவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். அது அந்த காலகட்டத்துக்கு அவசியமாக இருந்தது. இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாகவே ஆட்சியாளர்களுக்கு அன்று விடுதலைப் புலிகள் அமைப்பை கட்டுப்படுத்தி யுத்தத்தில் வெற்றி பெற முடிந்தது.

எவ்வாறிருப்பினும் யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஆட்சியாளர்களால் அந்த சட்டம் ஊடகங்களையும் எதிர்ப்பாளர்களையும் ஒடுக்கப் பயன்படுத்தப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். தற்போதைய அரசாங்கமும் அதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்துள்ளது. யுத்தம் நிறைவடைந்ததிலிருந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற வரை இந்த சட்டத்தின்கீழ் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் 2015ஆம் ஆண்டு அதில் திருத்தங்களை மேற்கொண்டு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தயாரிக்கப்பட்டது. ஆனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றமையால் அதனை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

மக்களின் சுதந்திரம் பறிக்கப்படும் போது அதில் முதலாவது இலக்கு ஊடகங்களாகும். முதலில் ஊடகங்கள் ஒடுக்கப்பட்ட பின்னரே ஏனையோர் தாக்கப்படுவர். ஊடகங்களை முடக்கினால் ஏனையோரை முடக்குவது இலகுவானதாகும். அதற்கான ஏற்பாடுகள் அந்த சட்ட மூலத்தில் காணப்படு கின்றன. இதற்கு மக்கள் எதிர்ப்பை வெளியிட வேண்டும். அவ்வா றில்லை எனில் எதிர்காலத்தில் மக்கள் தமது எண்ணங்களைக் கூட வெளிப்படுத்த முடியாத ஜனநாயகமற்ற சூழல் ஏற்படும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.